செம்மணி

நிலம் 3 துகள் 123 வள்ளுவர் ஆண்டு 2052, 26 கார்த்திகை - 02 மார்கழி 2022 வாரமலர் பக்கங்கள் 21

# சமஷ்டி தீர்வு அடிப்படையிலேயே ஆட்சிதரப்புடன் இனிமேல் பேச்சு

## 5 தமிழ்க் கட்சிகள் கூடித் தீர்மானம்



உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இணைப்பாட்சியே (சமஷ்டி) கொழும்பு ஆட்சியாளர்களுடன் பேசுவதற்கான பொதுக் கொள்கை என்று முடிவு செய்துள்ளன இரண்டு தமிழ்த் தரப்புகள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளும் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியில் உள்ள கட்சிகளும் இணைந்து கொழும்பில் வெள்ளிக்கிழமை நடத்திய சந்திப்பில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அரசியல் தீர்வு தொடர்பாக மார்கழி 11ஆம் நாளுக்குப் பின்னர் பேச்சுக்களைத் தொடங்குவதாக அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அறிவித்தார். நாடாளுமன்றத்தில் தற்போது நடந்துவரும் நிதி நிலை அறிக்கை மீதான விவாதங்கள் முடிந்ததும் தீர்வு

பக்கம் 03

# 5 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு உதவ பிரிட்டன் 1 மில்லின் டொலர் நிதி வழங்கியது

## வடக்கு -கிழக்கில் மன்னாருக்கு மட்டுமே இந்த உதவி கிட்டும்


குறைந்த வருமானம் பெறும் 5 ஆயிரம் மீனவர் குடும்பங்களுக்கு உதவுவதற்கென பிரிட்டன் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை நன்கொடையாக வழங்கியுள்ளது என்று உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தப் பணம் மீனவர்களுக்கு 3 மாதங்களுக்கு மாதாந்த உதவித் தொகையாக வழங்கப்படவுள்ளது என்றும் அந்த அமைப்புக் கூறியுள்ளது. தங்காலை, நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, புத்தளம், சிலாபம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும், பாரம்பரிய நுட்பங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் குடும்பங்களுக்கே இந்த உதவித் தொகை வழங்கப்

பக்கம் 02

# வடக்கு கிழக்கில் மாவீரர் நினைவேந்தல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்த ஆண்டு மாவீரர் நினைவேந்தல்கள் எழுச்சியுடன் இடம்பெற்று வருகின்றன. போர் முடிவுக்கு வந்த 2009ஆம் ஆண்டின் பின்னர் ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வடக்கில் நல்லூர் மற்றும் பருத்தித்

பக்கம் 02



# அரசமைப்பை மிதித்து நடக்கிறார் வடக்கு ஆளுநர் மீது குற்றச்சாட்டு

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா இலங்கை அரசமைப்பை மீறி நடக்கின்றார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபை இயங்கு நிலையில் இல்லாதபோது சபைக்கான நியதிச் சட்டங்களைத் தானே உருவாக்கி வர்த்தமானியில் வெளியிட்டதன் மூலம் அரசமைப்பின் மாகாண சபைச் சட்டங்களை அவர் மீறிவிட்டார் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

"இது பெரும் அரசமைப்பு விதி மீறல்" என்கிறார் தவராசா. நியத்திச் சட்டத்தை உருவாக்குவதற்கு ஆளுநருக்கு எந்தவொரு அதிகாரமும் அரசமைப்பில் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"அரசமைப்பின்படி நியதிச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளுக்குரியது. அத்தகைய சட்டங்களை ஏற்று வர்த்தமானியில் வெளியிடுவது அல்லது நிராகரிப்பது மட்டுமே அளுநருக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமை. இதனை அறியாதவர் போல வடக்கு மாகாண ஆளுநர் செயலாற்றுகிறார். இத்தகைய முக்கிய விடயங்களில் குறைந்த பட்சம் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்ற பின்ன

பக்கம் 03

செம்மணி
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**



# தமிழ்த் தேசிய கட்சிகளை தாண்டியும் நீடிக்கவேண்டும் தற்போதைய கலந்துரையாடல்

கொழும்பு ஆட்சியாளர்களுடன் நடத்தவுள்ள பேச்சுக்களில் வடக்கு, கிழக்கில் தமிழர் நிலங்களைப் பாதுகாப்பது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுயாகப் பேணுவது, இணைப் பாட்சி (சமஷ்டி) அடிப்படையில் தீர்வைக் காண்பது ஆகிய விடயங்களை முன்னிறுத்துவது என்று 5 தமிழ்க் கட்சிகள் கூடி இணக்கம் கண்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. அது பற்றிய உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் வெளிவர வில்லை எனினும் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர் பில் வெளியாகியிருக்கும் தகவல்கள் இந்த மூன்று முக்கிய விடயங்கள் குறித்தும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளதாகவும் குறிப்பிடுகின்றன.

வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி ஆகிய 5 கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டிருந்தனர். தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்யும் கட்சிகள் இவை. இன்னும் சொல்லப்போனால் ஒரு காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒரே அணிக்குள் செயற்பட்ட கட்சிகள்தான் இவை. கருத்து மோதல்களால் பின்னர் ஈபிஆர் எல்எவ் சுரேஸ் பிரேமச்சந்திரனும் நீதியரசர் விக்னேஸ்வரனும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தார்கள்.

இவற்றைவிடவும் தமிழ்த் தேசியம் பேச்சிக்கொண்டு அரசியல் செய் யும் மேலும் சில கட்சிகளும் இருக்கின்றன. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அதில் முக்கியமானது. சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கட்சி போன்ற இன்னோரன்ன கட்சிகளும் இருக் கின்றன. அடுத்த கட்டப் பேச்சில் இந்தக் கட்சிகளையும் தமிழ் அரசுக் கட்சி அழைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தக் கட்சிகள் எல்லாமே தமிழ்த் தேசியத்தைத் தங்கள் அடிநாத மாகக் காட்டிக்கொண்டு அரசியல் செய்பவை. எனவே தீர்வு தொடர் பாகத் தமிழ்க் கட்சிகள் நடத்தும் கலந்துரையாடல்களில் இந்தக் கட்சிகளையும் இணைத்துக்கொள்வதில் தமிழ் அரசுக் கட்சிக்குத் தயக்கம் ஏற்படக் காரணங்கள் ஏதுமில்லை. அதுபோல் இந்தக் கட்சிகளுக்கும் அத்தகைய கலந்துரையாடலைத் தவிர்ப்பதற்குக் காரணம் ஏதுமில்லை. தமிழ்க் காங்கிரஸ் ஒருவேளை 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் விட யத்தில் முரண்பட்டு நிற்கக்கூடும் எனினும் மற்றைய இரு விடயங் களிலும் அதுவும் இணங்கி வருவதற்கான சாத்தியங்களே அதிகமுள்ளன. இது ஒரு தேர்தல் கூட்டு அல்ல, கொள்கை இணக்கத்தோடு இந் தக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பயணிப்பதற்கு. தீர்வு தொடர் பில் அனைத்து தமிழ்த் தரப்புக்களும் ஒரே கோரிக்கையை வலி யுறுத்துவதற்கான முயற்சி மட்டுமே. எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசியத்தைத் தாண்டிச் செயற்படும் கட்சிகளையும் கலந் துரையாடலுக்கு அழைத்து இணக்கத்தை ஏற்படுத்தவேண்டியது அவசியம்.

குறிப்பாக வடக்கில் ஈபிடிபி, சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள், கிழக் கில் கருணா, பிள்ளையான் அணிகள் என்பவற்றையும் இந் தக் கலந்துரையாடலுக்கு அழைத்து தமிழர் தரப்பின் ஒரு பொது இணக்கத்துடனான கோரிக்கையை முன்வைப்பது அவசியம். அது பயன்மிக்கதும்கூட.

தற்போது 5 கட்சிகளும் இணங்கிக் கொண்டுள்ள விடயங்கள் ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட வலியுறுத்துகின்ற விடயங் கள்தான். எனவே இது தொடர்பில் பொது இணக்கப்பாட்டை எட்டு வது முடியாத ஒன்றல்ல. அதற்கு முயற்சிக்கப்படுவதே அவசி யம். அந்தப் பொது இணக்கப்பாட்டை வென்றெடுக்க ஒவ்வொரு கட்சியும் தனக்குத்தனக்கான வழிவகைகளைக் கையாளலாம். அதில் தவறில்லை. ஆனால் எந்த வழியாயினும் அது தமிழர்க ளுக்கு ஒரே தீர்வைப் பெற்றுத் தருவதாக இருக்கவேண்டும். அதற் கான முயற்சியாக இந்தக் கலந்துரையாடல்கள் மாற்றப்படுவது அவசியம்.

## 5 ஆயிரம்...

படவுள்ளது.

மாதம் ஒன்றுக்கு 47 டொலர்கள் (17 ஆயி ரம் ரூபாய்) என்ற அடிப்படையில் இந்த உதவித் தொகை வழங்கப் படவுள்ளது.

"இலங்கையில் மீனவர் சமூகம் மிகவும் நெருக் கடியான சூலில் தவிக்கின்றன என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். இந்தத் தொழிற் றுறையில் உள்ளவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைகளில் சிலவற்றையாவது எதிர் கொள்ளக்கூடிய வகை யில் ஐக்கிய இராச் சியம் 8 லட்சத்து 80 ஆயிரம் அமெ ரிக்க பவுன்ட்ஸ்களை நன்கொடையாக வழங்கு கின்றது" என்று கொழும்புக்கான பிரிட்டிஷ் தூதுவர் செய்திக் குறிப் பில் தெரிவித்துள்ளார்.

மீனவக் குடும்பங்களின் போசாக்கு நிலையை மேம்படுத்து வதிலும் ஏனைய அத்தியாவசிய தேவைகளை ஈடுசெய்வதி லுமே இந்த உதவி கவனம் செலுத்துகின்றது என்று தெரி விக்கப்பட்டது.

மீன் பிடிக்கச் செல்லும் நாட்கள் குறைந்து போனமை, மீன்பிடி குறைந்துபோனமை, வருமான இழப்பால் கிரா மங்களில் மீன் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து மீனுக்கான தேவை வீழ்ச்சியடைந்திருப்பது என்பவற்றால் மீனவர்கள் அதிகம் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார் உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி விமலோந்திர சரன்.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் மீனவர்களைப் பாது காப்பத்தில் எமது அமைப்பு அர்ப்பணிப்போடு செயற் பட்டு வருகின்றது. அதில் சேர்ந்துகொண்டு தனது ஆத ரவை வழங்கிய பிரிட்டனுக்கு எமது நன்றிகள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு...

துறையில் மாவீரர்களின் பெயர்கள் எழுதப்பட்ட தற்காலிக நினைவுத் தூபிகள் எழுப்பட்டு இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விடங்களில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அதேபோன்று கிழக்கிலும் ஆங்காங்கே பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

ஞாயிற்றுக்கிழமை மாவீரர் தினத்தையொட்டி துயிலும் இல்லங்களில் நினைவுச்சுடர் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கென துயிலுமில்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

நினைவேந்தல்களைத் தடுப்பதில்லை என்கிற அரசியல் முடிவுகளின் காரணமாக மாவீரர் நாள்களைக் கட்டுப்படுத்து வதற்கு அரச படையினர், காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறபோதும் நிகழ்விடங்களில் படையினரின் கடுமையான கண்காணிப்பு நிலைநாட் டப்பட்டுள்ளது. நிகழ்வுகளை ஏற்பாடு செய்வோர், அதில் பங்கேற்போர் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இருப்பினும் சில இடங்களில் மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வுகளும் இந்த வாரத்தில் இடம்பெற் றுள்ளன. சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நினைவிடங் களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின் றது. மாவீரர்களின் பெற்றோர்கள் பொதுச் சுடர்களை ஏற்றி இந்த அஞ்சலிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமஷ்டி...

தொடர்பாகப் பேசுவதற்கு ஆளும் தரப்பும் எதிர்த் தரப்புகளும் நாடாளுமன்றத்தில் பகிரங்க இணக்கம் தெரிவித்தன. இந்தப் பேச்சுக்களுக்கு முன்பாக தமிழர் தரப்பின் ஒருமித்த கருத்தை எட்டுமுகமாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் இணக்கத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் எடுத்திருந்தார். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மூலம் இந்தக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

கூட்டமைப்பில் உள்ள தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியனவும் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி மற்றும் அதில் அங்கம் வகிக்கும் ஈபிஆர்எல்எவ் கட்சி ஆகியனவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டன. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன், இராசையா சிறீதரன், கோவிந்தம் கருணாகரன் ஆகியோரும் ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் புளொட் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தனும் ஈபிஆர்எல்எவ் சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனும் கூட்டத்தில் இடம்பெற்றிருந்தனர்.

இத்தகைய கூட்டம் ஒன்றை சம்பந்தன் ஏற்பாடு செய்வது மகிழ்ச்சி என்றும் அதில் பங்கேற்கத் தயார் என்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தபோதும் அவர் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை. காரணத்தோடேயே அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று இந்தக் கூட்டத்திற்கான அழைப்பை விடுத்த தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சேனாதிராசா கூ-ட்டத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் அது என்ன காரணம் என்பதை அவர் அங்கு விளக்கவில்லை.

தற்போதைய அரசியல் சூழல், தீர்வு முயற்சிகள், அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுக்கான அழைப்பு ஆகியன தொடர்பில் சுமார் மூன்று மணி நேரம் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இறுதியில் முக்கியமான மூன்று விடயங்களின் அடிப்படையில் பேச்சுக்களை அணுகுவது என்று ஐந்து- கட்சிகளும் முதற்கட்டமாக ஒரு முடிவுக்கு வந்தன.

**1.** வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச நிறுவனங்கள் மற்றும் படையினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு உடனடியாக நிறுத்தப்படுவதுடன் ஏற்கனவே கையகப் படுத்தப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவது.

**2.** அரசியல் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் இலங்கையின் அரசமைப்பில் ஏற்கனவே உள்ள சட்டங்களை (13ஆவது திருத்தச் சட்டத்தை இது குறிக்கின்றது) முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாண சபைத் தேர்தல்களை உடன் நடத்தவேண்டும் என்று வலியுறுத்துவது.

**3.** தமிழ் மக்களின் சரித்திரத் தாயகமான வடக்கு கிழக்கு இணைந்த நிலப்பரப்பில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய உச்சபட்ச அதிகாரப் பகிர்வை, இணைப்பாட்சியின் (சமஷ்டி) அடிப்படையில் கோருவது.

ஆகிய மூன்றையும் பேச்சு மேசையில் வலியுறுத்துவது என்று 5 கட்சிகளும் முடிவு செய்திருக்கின்றன. ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி இந்த விடயத்தில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கான முயற்சிகளை எடுப்பது என்றும் அனைத்துக் கட்சியினரும் இணங்கிக்கொண்டனர் என்று பேச்சில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்தோ அதில் எட்டப்பட்ட இணக்கங்கள் குறித்தோ உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் இது வரையில் விடுக்கப்படவில்லை.

2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க கூட்டு ஆட்சியில், அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றத்தின் மூலம் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் ஒருமித்த ஆட்சி என்று பெயர் குறிப்பிடப்பட்ட ஒற்றையாட்சியின் கீழ் தீர்வைப் பெறுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியிருந்தது. பௌத்த மதத்திற்கு தற்போது வழங்கப்படும் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கும் அது இணங்கியிருந்தது.

கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி இருந்தது. அதன் எதிர்த் தரப்புக்கள் இந்த விவகாரத்தை கடந்த பொதுத் தேர்தலின்போது தமது அரசியல் முதலீடாக்கிக் கொண்டுமிருந்தன. தமிழ்க் காங்கிரஸ் அதிகம் விமர்சித்திருந்தது.

இந்தப் பின்னணியிலேயே தற்போது 5 கட்சிகளும் இணைந்து இணைப்பாட்சியின் அடிப்படையிலேயே (சமஷ்டி) தீர்வை வலியுறுத்துவது என்று முடிவு செய்துள்ளன.

---

## அரசமைப்பை...

ராவது அவர் செயற்பட்டிருக்கவேண்டும்" என்றும் தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச் சட்டம், சுற்றுலாப் பயணிகள் நியதிச் சட்டம் ஆகிய இரு சட்டங்களையும் 27.10.2022 திகதியிடப்பட்ட வர்த்தமானியில் ஆளுநர் தியாகராஜா வெளியிட்டுள்ளார். 2303/29 இலக்க வர்த்தமானி மூலம் இந்தச் சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

நியதிச் சட்டங்களை மாகாண சபைகளே, அதாவது மக்கள் பிரதிநிதிகளே ஆக்கலாம் என்று அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது அவற்றை ஆளுநர்கள் ஆக்க முடியும் என்று எங்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை, இலங்கை வரலாற்றில் இது வரை அப்படி நடந்ததுமில்லை என்று அரசியல் அவதானிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பிரமுகர் அரசியலால் தமிழர்களுக்குப் பயனேதுமில்லை

நாகராசா

தமிழர் அரசியலை இலங்கை அந்நியர் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கு முன்னரான காலம் பின்னரான காலம் என்று வரையறை செய்ய முடியும். அதேபோல 30 வருடகால ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 2009க்கு முன்பான காலம் அதற்குப் பின்பான காலம் என்றும் வகுத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் பார்த்தால், ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழர் மத்தியில் பிரமுகர் அரசியல் முற்று முழுதாகச் செயலிழந்து காணப்பட்டது. இந்தப் பிரமுகர்கள் எதையாவது செய்ய வேண்டுமானால் புலிகளிடம் கேட்டே செய்யவேண்டிய நிலை இருந்தது. புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் சாதி, மதம், பிராந்தியம், கல்வித் தரம், பால் நிலை என எல்லாம் பேணப்பட்டதைப்போலவே பிரமுகர் அரசியலுக்கும் இடமிருக்கவில்லை.

**பிரமுகர் அரசியல்வாதிகளின் வேண்டுதல்கள்**

பிரமுகர் அரசியலில் இருந்த தலைவர்கள் தாம் புலிகளின் காலத்தில் அரசியல் நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை உணர்ந்த நிலையில் அதை மீண்டும் பெறுவது இந்திய - இலங்கை அரசுகளின் கையிலேயே உள்ளது என்பதைத் திடமாக நம்பினர். இந்த இரண்டு அரசுகளுடனும் இணைந்து புலிகளை ஒழித்துக்கட்டுவதற்காக முக்கிய தலைவர்களுடன் கைகோர்த்துத் தமது நல்லிணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர். தமது பிரமுகர் அரசியலை எப்படியாவது மீண்டும் கொண்டு வருவதை நோக்கிச் செயற்பட்டனர். ஜனநாயக அரசியலே அவசியம் எனவே ஆயுதப் போராட்டம் ஒழிக்கப்படவேண்டும் என்பதில் சிங்களத் தலைவர்களைவிடத் தமிழ் பிரமுகர் அரசியல்வாதிகள் அதிக அக்கறை காட்டினார்கள்.





இலங்கையில் நிலைகொண்டிருந்த வெளிநாட்டு உயர் ஆணையர்கள் தமது நாட்டின் சுதந்திர தினங்கள், வேறு நிகழ்வுகளை நடத்தும்போது அதில் கலந்து கொண்ட தமிழ்ப் பிரமுகர்கள் வெளிநாட்டு உதவிகளைக் கோரினர். புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்று எல்லாப் பக்கங்களிலும் செயற்பட்டார்கள். புலிகளை அழிப்பதற்காக எந்தச் சக்திகளுடனும் கைகோர்த்தார்கள். குண்டு துளைக்காத கார்களையும் பரிசாகப் பெற்றார்கள்.

**ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர்**

ஆயுதப் போராட்டம் நடக்கும் நாட்டில் அது முடிவுக்கு வந்ததும் மீள்கட்டுமானம், மறுகட்டமைப்பு, அவலப்பட்ட - இழப்புகளைச் சந்தித்த மக்களை இயல்புக்குக் கொண்டுவருதல் போன்ற பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆயதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த நாடுகளை இதற்கு முன்னுதாரணமாகக் கையிலெடுத்திருக்க வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணம் முழுதும் இந்தத் துரித மீள்கட்டுமாணம் முன்னெடுக்கப்பட்டிருக்கவேண்டும். போராடிய குடும்பங்களின் விவரம், இறுதிப்போரில் இறந்தவர்கள், ஊனமுற்றவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தல்வேண்டும், போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ்த் தலைவர்களோ கட்சிகளோ இது விடயத்தில் கவனம் செலுத்தவில்லை.

1949இல் தமிழரசு என்று தோன்றிய கட்சி தற்போது







தமிழ்த் தேசியம் எனப் பேசி வரும் நிலையிலும் மக்கள் மீது அக்கறையுள்ள வேலைத்திட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை.

**சுமந்திரனின் வருகை**

2009 போர் முடியும் வரை சுமந்திரன் அரசியலில் ஈடுபடவில்லை. அவர் குறித்துச் சாதாரண மக்களுக்கு அதுவரை எதுவுமே தெரிந்திருக்கவில்லை. தொழில் ரீதியில் சட்டத்தரணியாகவும் அமெரிக்கா தலைமையிலான இவாஞ்சலிஸ் கிறிஸ்தவ அமைப்பின் பிரதிநிதியாகவும் அவர் இருக்கிறார். அவர் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டார். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றார். முதல் தடவையில் தேர்தலில் போட்டியிடாமல் அவர் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தாலும் பின்னர் இரண்டு தடவைகள் தேர்தலில் வெற்றி பெற்றார்.

தேர்தல் காலத்தில் எதையாவது எழுச்சியாகக் காட்டி வாக்குகளைச் சூறையாடுவது தமிழ் அரசுக் கட்சியின் வழக்கம். அந்தப் பின்னணியில் சட்டத்தரணியும் கொழும்பைப் பின்னணியாகக் கொண்டவருமான சுமந்திரனைத் தேசியப் பட்டியல் மூலம் கட்சிக்குள் உள்வாங்கினார் சம்பந்தன். அதேவேளை 2015 தேர்தலில் தேசியப் பட்டியலில் பதிவான நீண்ட காலத் தமிழ் அரசுக் கட்சியின் தொண்டராக இருந்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தை உள்வாங்காது புறக்கணித்தது தமிழ் அரசுக் கட்சியின் தலைமை.

**விக்னேஸ்வரனின் வருகை**

2013 வடக்கு மாகாணசபைத் தேர்தலில் கட்சிக்குள்ளிருந்தே சிறந்த முதலமைச்சர் வேட்பாளரைக் களமிறக்கும் நிலையில் கூட்டமைப்பினர் இருக்கவில்லை. எழுச்சியாக எதையாவது செய்து காட்டவேண்டும் என்பதற்காகக் கொழும்பைச் சேர்ந்த நீதிபதியான விக்னேஸ்வரனைக் களமிறக்கினார்கள். ஏறத்தாழ ஒரு மீட்பராகத் தமிழ் மக்கள் மத்தியில் விக்னேஸ்வரன் காட்டப்பட்டார். இணைந்த வடக்குக் கிழக்கில் சமஷ்டி கோரும் தமிழ் அரசுக் கட்சி வடக்குக்கு மட்டும் தனியான மாகாண சபையை ஏற்று நீதிபதியைக் களமிறக்கியது.

> **சேர்.பொன்.இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வா, சுமந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோர் கொழும்பு மைய உழைப்பையும் சொத்துகளையும் கொண்டவர்கள்.**

**கொழும்பு அரசியலுடன் ஒத்துப்போதல்**

சேர்.பொன்.இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வா, சுமந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோர் கொழும்பு மைய உழைப்பையும் சொத்துகளையும் கொண்டவர்கள். தமது சொந்த வாழ்க்கைக்காகக் கூட வடக்குக் கிழக்குக்குள் முடங்கிக்கொள்வதற்கு அவர்கள் விரும்பியதில்லை. தமிழரின் அரசியல் களத்தில் இவர்கள் நீடிக்கும்வரை தமிழருக்கான நிரந்தரத் தீர்வு எட்டப்படுவது சாத்தியமற்றதே. வடக்கு கிழக்கில் வாழக்கூடிய, பன்னாட்டு அரசியலையும் கையாளக்கூடிய தலைவர்களை உருவாக்குவதன் மூலமே தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக இருக்கும்.

சுமந்திரனின் அரசியல் என்பது கடந்த 12 வருட காலத்தில் பெரு வளர்ச்சியை எட்டியிருக்கிறது. கட்சிக்குள் உள்ள மற்றவர்களை விஞ்சி நிற்கும் அளவுக்குக் கட்சித் தீர்மானங்களாகத் தனது சொந்தத் தீர்மானங்களை முன்வைத்துக் கொழும்பு அரசியலுடன் பொருந்திக்கொள்ளும் நிலையை உருவாக்கியிருக்கிறார். தனி ஒருவரான சுமந்திரனின் வளர்ச்சி என்பது 2009க்குப் பின்னர் பெரெழுச்சியுடன் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அது அவருக்கு நன்மையளிக்கும் அளவிற்குத் தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கவில்லை என்பதுதான் யதார்த்தம்.

சிறைக்குள்... 84

# நீதிமன்ற விசாரணைகளின் பின்னரே விடுதலை சாத்தியம்



அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கவிருக்கிறார்கள் என்று பல்வேறு தரப்பினரும் கதைகள் கூறியபோதிலும் அப்படி எதுவுமே நடக்கவில்லை. **18.4.2002** அன்று காலை பத்து மணியளவில் 'பி' பிரிவில் பொதுக் கூட்டம் ஒன்றைக் கைதிகள் கூட்டினர். டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன கேட்டுக்கொண்ட **3** மாத காலப்பகுதி வரை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை என்றும் அதன் பின்னர் அதைத் தீர்மானிக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

**19.4.2002** அன்று கப்பல், துறைமுக அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை ஆகியோர் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குச் சென்றதைத் தொலைக்காட்சியில் பார்த்தேன். அடுத்த மாதம் **25**ஆம் திகதிக்கு முன்னர் கைதிகளை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அவர்கள் உத்தரவாதமளித்து நீராகாரம் வழங்கி அங்கு முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை முடித்து வைத்தனர். பின்னர் அவர்கள் கூறியதுபோல எதுவும் நடக்கவில்லை.

**23.4.2002** அன்று மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு வந்த **3** சட்டத்தரணிகள் தம்மை அமைச்சர் ரவூப் ஹக்கீம் அனுப்பினார் என்றும் அரசியல் கைதிகளின் விவரத்தைப் பெற வந்திருக்கிறோம் என்றும் கூறி எல்லாக் கைதிகளின் விவரங்களையும் கேட்டு எழுதிக்கொண்டார்கள். அதன் பின்னரும் எதுவும் நடக்கவில்லை.

**3.5.2002** விடுதலைப் புலிகளும் அரசும் பேச்சுக்களைத் தொடங்க முன்னர் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்கவுள்ளதாக ரொயிட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அப்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். அதுவும் நடக்கவில்லை.

புலிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள், மறைமுகமாகத் தொடர்பு பட்டவர்கள் என **2** பிரிவுகளாக அரசியல் கைகதிகள் விடுவிக்கப்படவிருக்கின்றனர் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க **9.5.2002** அன்று ஊடகங்களுக்கு அறிவித்தார். அதுவும் நடக்கவில்லை.

தர்மராசா

பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகள் பற்றியும் கைதிகள் விடுதலை பற்றியும் 12.5.2002 அன்று காலையில் ரூபவாகினி ஐ அலைவரிசையில் சட்டத்தரணி றெமிடியஸ் கூறும்போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி அரசியல்வாதிகள், தலைமை அமைச்சர் ஆகியோர் ஒரு கால அளவு தந்திருப்பதாகக் கூறுகிறார்கள் அந்தக் காலக்கெடு முடியும்போது மீண்டும் உரிய இடத்தில் அழுத்தத்தைக் கொடுப்பதில்லை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் இல்லையேல் நாடாளுமன்றத்துக்குப் போகமாட்டோம் என்று கூறி யாரும் வெளியேறுவதில்லை. நாங்கள் கொழும்பில் நடத்திய ஒன்றுகூடலில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் கலந்து கொள்ளவில்லை. ஆனால் சிங்கள உறுப்பினர் சமிந்த தேரர் கலந்து கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஜே.வி.பியினர் கைதான போது தான் பலரை விடுதலை செய்திருக்கிறார் என்றும், தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக ஜே.வி.பி. கருத்துரைப்பது வேதனைக்குரியது என்றும் குறிப்பிட்டார். கைதிகள் பற்றிய விழிப்புணர்வு இருக்கின்றபோதும் அனைவரையும் நீதிமன்ற விசாரணைகளின் மூலம் மட்டுமே விடுதலை செய்ய வாய்ப்புகள் அதிகம் உள்ளது என்றார்.

24.5.2002 அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தலைமை அமைச்சர் ரணிலை அலரி மாளிகையில் சந்தித்துச் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். பேச்சுகளை தொடங்க முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும், புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் பாடசாலைகள், கோவில்கள் போன்ற இடங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்பு மூலம் விடுவிக்கப்பட வேண்டும் என்றனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட ரெலோவைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன், சாட்சிகள் இல்லாத வழங்குககளை உடனடியாக திரும்பப் பெறுவதாகவும் ஏனைய வழக்குகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தலைமை அமைச்சர் உறுதியளித்துள்ளார் - என்றார்.

(தொடரும்)

# புலிகள் மீண்டும் வந்துவிடக்கூடாது

**விதுரன்**

2009இல் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசியலுக்கு வந்த ஒருசாரார் தமக்கும் புலிகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பிருப்பதாகக் காட்டிப் புலிகளின் விடயத்தில் கருத்து வெளியிடவும் நினைவு தினங்களைக் கொண்டாடுவதற்கும் தமக்கு மட்டுமே உரித்துண்டு என்று கூறி வருகின்றனர். போராட்டம் நடந்த 2009க்கு முன்னாரான காலத்தில் அவர்கள் எங்கிருந்தார்கள், எப்படியிருந்தார்கள் என்பது அவர்களின் ஊர் மக்களுக்கு நன்கு தெரியும்.

போராளிக்கு ஒரு நேர உணவு கொடுக்காதவர்களும் போராட்ட இடப்பெயர்வுகளின் போது ஒரு கிலோ மீற்றராவது சைக்கிளில் பயணிக்காதவர்களும் எனப் போராட்டத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்புகளுமில்லாதவர்களாக இவர்களில் சிலர் இருந்தார்கள். மட்டுமன்றிப் புலிகளின் வரி அறவீடுகள், ஆட்சேர்ப்புகள் போன்ற விடயங்களில் புலிகளைத் தாறுமாறாக விமர்சித்தவர்கள் இவர்கள். சிலர் புலிகள் அழிந்த பின் தாமும் புலிகளுடன் இணைந்து போராடினோம் என்று கூறுமளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இதனால் உண்மையான போராளிக் குடும்பங்கள் பெருமளவுக்கு ஒதுங்கிவிட்டன.



**புலிகள் நாடாளுமன்ற அரசியலை விரும்பவில்லை**

புலிகள் நாடாளுமன்ற அரசியலை நாடிச் செல்லவில்லை. புலிகளின் ஆதரவாளர்கள் தாம் என்று தற்போது கூறுபவர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் ஆசைக்கு அடிமைப்பட்டவர்களாகவே இருக்கிறாரகள். அதற்காகவே படாதபாடு படுகிறார்கள். தமது அந்த நோக்கத்தை அடைவதற்காகவே புலிகளின் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். புலிகளுக்கு நேர் எதிராகச் செயற்படும் இவர்கள் புலிகளின் போராட்டத்தை முதலீடாக வைத்துச் செயற்படுகின்றனர். இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதிலிருந்து பிரிந்த மணிவண்ணன் அணியும் தீவிரமாகச் செயற்பட்டு வருவது தெரிகிறது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தமது அரசியலுக்காகப் புலிகள் விடயத்தைப் பட்டும் படாமலும் ஓடும் புளியம்பழமும்போல அவ்வப்போது தொட்டும் விட்டும் வருகின்றது.

**புலிகளை வைத்து அரசியல் நடத்துபவர்கள் சமய வழிபாடுபோல புலிகள் துதிபாடி தமது பெயரை நிலை நாட்ட விரும்புகிறார்களே தவிர புலிகள் மீண்டும் களமிறங்குவதை விரும்பமாட்டார்கள்.**

**2009இன் பின்பான செயற்பாடுகள்**

2009இல் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2014 காலப்பகுதியில் பளையில் புலிகள் செயற்பாட்டில் இறங்கினர் என்று இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். அங்கு நெடியவன் தலைமையிலான செயற்பாடு ஒன்றில் 3 பேர் களமிறங்கினர் என்றனர். பின்னர் அந்த மூவரும் ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழ்த்தேசியம் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உதவியுடனேயே அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுச் சுட்டுக்கொல்லப் பட்டனர் என்றொரு கதையும் உண்டு. அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொல்ல வந்தோர் என அடையாளப்படுத்தப்பட்டுச் சிலர் சிறையில் அடைக் கப்பட்டனர். சுமந்திரனுக்குச் சிறப்பு அதிரடிப்படை யினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்தப் பாதுகாப்பு 2020 தேர்தல் வரை நீடித்தது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வாக்கு எண்ணப்பட்டுக்கொண்டிருந்தபோது சிறப்பு அதிரடிப் படையுடன் அங்கு வந்த சுமந்திரனுக்கு அங்கு எதிர்ப்புக் காட்டப்பட்ட காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவின. இப்படி புலிகள் மீண்டும் வந்தால் அவர்கள் இன்றைய அரசியல் கொள்கை நிலைப்பாட்டுக்கு எதிரானவர்களாகவே இருப்பார்கள் என்பது யதார்த்தத்தில் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

**புலிகள் மீண்டும் வந்தால் யாருக்குப் பாதிப்பு**

புலிகளை வைத்து அரசியல் நடத்துபவர்கள் சமய வழிபாடுபோல புலிகள் துதிபாடி தமது பெயரை நிலை நாட்ட விரும்புகிறார்களே தவிர புலிகள் மீண்டும் களமி றங்குவதை விரும்பமாட்டார்கள். அவ்வாறு புலிகள் செயற் பாட்டில் இறங்கினால் தற்போது புலிகளை வைத்து அரசியல் நடத்துகின்ற பலரும் நாட்டில் இருக்க முடி யாத நிலை ஏற்படும். இதனால் அவர்களுக்கே அதிக பாதிப்பு இருக்கும். புலிகளின் கை ஓங்கினால் தமது எதிர்காலம் நிச்சயம் பாதிப்புக்குள்ளாகும் என்று அவர்க ளுக்கு நன்கு தெரியும்.

நாடாளுமன்ற அரசியலுக்கு வந்த யாருமே ஆயுதப் போராட்டம் மக்கள் மத்தியில் எழுச்சியடைவதை விரும் பப்போவதில்லை. 2009க்கு முற்பட்ட 30 வருடகாலம் அவர்களை அரசியலில் இருந்து ஓரம் கட்டியது போல இனியும் ஒரு காலத்தை அவர்கள் எதிர் கொள்ள விரும்பமாட்டார்கள்.

**ரஜீவ் கொலையாளிகளை அனுமதிக்கக்கூடாது**

அண்மையில் ரஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையான இலங் கையர்களை இலங்கைக்கு அனுப்பக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறி யிருந்தார். அவ்வாறு அவர்கள் இலங் கைக்கு வந்தால் இலங்கை அரசு அவர்களைப் பழி வாங்கும் என்றுள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரவிருக்கும் அந்த நபர்களை வரவேற்று அவர்களுக்கான பாது காப்பு ஏனைய வசதிகளை வழங்கவேண்டிய கடப்பாடு தமக்கு உண்டு என்பதை மறந்து விட்டு அந்தப் பொறுப் பைத் தட்டிக் கழிக்கிறார் கஜேந்திரகுமார். இலங்கை அரசுடனும் போட்டி போட்டு அவர்களின் இயல்பு வாழ்க் கைக்கு வழிவகை செய்திருக்கவேண்டிய தலைவர் அவர்.

தமிழ்த் தேசியம் பேசி அரசியல் செய்கின்ற ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது விடயத்தில் களமி றங்கி அவர்களுக்கான உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். அவர்கள் தண்டனை முடிந்தே திரும்புகி றார்கள். எனவே அவர்களை மீண்டும் தண்டிக்க முடி யாது கூடாது. இந்தக் கட்டத்தில் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. புலிகள் ஆயுதங்களைக் கையிலெடுத்தால் இலங்கை அரசுக்குப் பாதிப்பு என்பதைவிட புலிகளை வைத்துத் தமது பிழைப்பை நடத்தி வருபவர்க ளுக்கே அதிக ஆபத் துள்ளது என்பது.



# ஃபின்லாந்து கல்வியில் ஆசிரியருக்கான முக்கியத்துவம்

06



ஃபின்லாந்துக் கல்வித் துறையில் அடுத்து நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டிய அம்சம், ஆசிரியர்களுக்கான அதிகாரம்.

ஃபின்லாந்தின் புகழ்பெற்ற அரசியலாளர்களில் ஒருவர் பேர் ஸ்டேன்பேக். 1979- முதல் 1983 வரை கல்வி அமைச்சராக இருந்தவர். சர்வதேச பன்னாட்டளவில் 2015இல் போர்ட்டோ ரிகோவில் நடந்த கல்வியாளர் மாநாட்டில் பங்கேற்ற அவரிடம், "ஃபின்லாந்து கல்வியின் வெற்றிக்கான இரகசியத்தை ஒரு வரியில் சொல்ல முடியுமா?' என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில், 'கல்விக்கும் ஆசிரியர்களுக்குமான மரியாதைக்குரிய பிணைப்பு அதை நாங்கள் உருவாக்க 150 ஆண்டுகள் ஆனது!" என்றார்.

**கல்வித் துறையின் அதிகாரப்பரவலாக்கம்**

ஃபின்லாந்து கல்வித் துறை அதிகாரப் பரவலாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவது. ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலும் கல்வித் துறையின் தன்னாட்சி உரிமைகள் உள்ளாட்சி வலையத்திற்குள் வருபவை. பள்ளிக்கூட நிர்வாகத்தில் உள்ளாட்சி அமைப்புகளே முக்கியப் பங்கு வகிக்கும். ஃபின்லாந்து உள்ளிட்ட நார்டிக் நாடுகளின் அதிகாரங்கள் இன்னும் கீழே இறங்கிபோய் ஆசிரியர்கள் இடத்தில் மிகுந்து இருப்பவை.

ஃபின்லாந்தில், தேசியப் பாடத் தொகுப்பு (national curriculum framework) என்பது, 1970க்குப் பிறகு ஒரு வழிகாட்டியாக உண்டே தவிர, பள்ளிக்கூடங்களில் ஒரே மாதிரியான பாடங்கள் இருப்பதில்லை. அரசின் வழிகாட்டலை ஒரு திசைகாட்டியாக எடுத்துக்கொண்டு, அந்தந்தப் பகுதிகள், அவரவர் சூழல்களுக்கு ஏற்ப பாடங்களை ஆசிரியர்களே வகுத்துக்கொள்கிறார்கள். எந்தப் பள்ளியில் எம்மொழிகளில் பாடம் இருத்தல் வேண்டும், துணை மொழிப்பாடங்கள் எவையவை இருத்தல் வேண்டும், எந்த வயதில் எந்த மொழிகளுக்கான பயிற்சிகள் தொடங்க வேண்டும் என்பதை முடிவெடுக்கும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்தது ஆகும். உள்ளாட்சி அமைப்புகள் ஆசிரியர்களின் வழிகாட்டல்படி இந்த முடிவுகளை எடுக்கின்றன.



விஜய் அசோகன்

குறிப்பாக, அரசியல் அதிகாரப் பரவலாக்கச் சீர்திருத்தங்கள் வலுவாகக் கொண்டுவரப்பட்ட காலகட்டத்தில், கல்விக்கான அதிகாரப் பரவலாக்க நடைமுறைகளும் இங்கே வலுவாகின. இதன் காரணமாக 320 உள்ளாட்சி அமைப்புகள் பள்ளிகளை நடத்தும் முழுமையான தன்னாட்சி அதிகாரத்தைப் பெற்றன.

உள்ளூர் பண்பாடு, உள்ளூர் மொழி, உள்ளூர் பொருளாதாரம் இவையெல்லாம் கல்வியில் பிரதிபலிப்பது முக்கியம் என்பதில் உறுதிபட இருக்கிறது ஃபின்லாந்து. இன்னும் சொல்லப்போனால், அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் பிற நாட்டினர், பிற மொழியினரையும் கருத்தில் கொண்டு, பள்ளியில் பயிலும் பல்வேறு நாட்டினருக்கும் ஏற்றார்போல கல்வி வழங்குகின்றனர்.



கி.சேது

# குழந்தையும் தெய்வமும்

முன்பெல்லாம் பண்டிகைகளை ஒட்டி, புத்தாடை எடுத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டாடுவதுண்டு. பின்னர் பிறந்தநாள். இப்போதோ, எடுத்ததற்கெல்லாம் கொண்டாட்டம்தான். போதாக்குறைக்குப் பள்ளிகளில் நடத்தப்படுகிற விழாக்கள் வேறு. ஒற்றைக் குழந்தை பெற்றவர்களுக்கு இது எளிதாக இருக்கலாம்; ஒன்றுக்குமேல் பெற்றவர்கள் பாடு திண்டாட்டம்தான்.

"அதனால் என்ன? கொண்டாடக் கொண்டாடக் குழந்தைகள் குதூகலம் அடைவார்கள். நல்லதுதானே' என்று அமைதி கொண்டாலும், பல நேரங்களில் அளவுக்கு மீறிய கொண்டாட்டம் திண்டாட்டத்தில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது.

பணமுள்ளவர்கள் எதையும் எப்போதும் கொண்டாடிக் கொண்டிருக்கலாம். இல்லாதவர்கள், எப்படிக் கொண்டாடுவது? இன்றைய பொருளாதார நெருக்கடியில் மத்திய தர வர்க்கத்தினர்கூட செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

வசதி படைத்தவர்களின் இல்லக் கொண்டாட்டங்களுக்குச் சென்று வரும் பிள்ளைகள் தன் வீட்டிலும் அதுபோல் கொண்டாடவேண்டும் என்று அடம்பிடித்து அழும்போது படு சிரமம். தவிர்த்தால் அதற்கொரு நியாயத்தையும் முன்வைத்து வினாத் தொடுப்பார்கள். "நாம் மட்டும் அவர்கள் வீட்டுக்குப் போய்க் கொண்டாடிவிட்டு வந்தோம். பதிலுக்கு நாம் அவர்களை அழைக்க வேண்டாமா" என்று கேட்பார்கள். அதை ஆமோதிக்க, அம்மாக்கள் இருக்கிறார்கள்.

வாழ்க்கைப்போக்கில் இயல்பாக நடத்தப்படவேண்டிய கொண்டாட்டங்கள், அவரவர் வசதிக்கேற்பப் பகட்டும் படாடோபமும் நிறைந்தவையாக ஆகின்றபோது, எளிமை நழுவிப்போய் விடுகிறது. இவையே கொண்டாட்டத்திற்கான விதிமுறைகளையும் உருவாக்கிவிடுகின்றன.

படிப்பது, நடிப்பது, திறன்களை வெளிப்

> "கேட்டதும் உடனே கிடைத்துவிடுகிற எந்தப் பொருளுக்கும் மதிப்பில்லை."

படுத்துவது ஆகியவற்றில் இருக்கும் "போலச் செய்தல்' இத்தகைய கொண்டாட்டங்களில் வந்து நிறைந்து விடுகிறது. கௌரவத்திற்காகக் கட்டாயம் செய்யப்பட வேண்டியவையாக, இவை ஆகி வளர்கின்றன. விருந்து, பரிசளிப்பு, குடும்பத்தோடு போக வாகனத்தேவை என்று கணிசமான செலவைச் செய்ய வைத்துவிடுகின்றன.

இவையெல்லாம் நாம் சிறுபிள்ளைகளாக இருந்த காலத்தில் இல்லை. இப்போது வருமானம் வருகிறதோ இல்லையோ இந்த மாதிரிச் செலவினங்களைதான் மிகுந்து போகின்றன என்று அலுத்துக் கொள்கிறவர்களாலும்கூட இவற்றைத் தவிர்க்க இயலவில்லை.

காலத் தேவைக்கேற்ற வளர்ச்சிதான் இது. நாம் பெற முடியாத பல அனுபவங்களையும் ஆனந்தங்களையும் நம் பிள்ளைகள் பெறுவது தவறா என்று சமாதானப்படுத்திக்கொள் கிறவர்களும் இருக்கிறார்கள். "நாம் சம்பாதிப்பதும் சேர்த்துவைப்பதும் பிள்ளைகளுக்காகத்தானே. அனுபவித்துவிட்டுப் போகட்டும்" என்னும் பாச உணர்வு நியாயமானதுதான். அந்த அனுபவம் ஆக்கம் சார்ந்ததாக இருந்தால் வேண்டும். அவர்களைத் திசை மாற்றும் நிலைக்குக் கொண்டு சேர்ப்பதாக ஆகிவிடக்கூடாது.



எந்தப் பொருளுக்கும் ஒரு விலையுண்டு. அது பண மதிப்பீட்டு விலை மட்டுமல்ல. உடல்சார் உழைப்பும் சம்பந்தப்பட்டது. விளையாட்டுப் பொருள்களோ, உணவுப்பண்டமோ, வாகனச் சலுகைகளோ, எதுவானாலும் அவற்றை நுகர்வதற்காகச் செலுத்தப்படும் தொகைக்குக் குறைந்த அளவேனும் உடல் உழைப்பு இருந்தே ஆகவேண்டும்.

கேட்டதும் உடனே கிடைத்துவிடுகிற எந்தப் பொருளுக்கும் மதிப்பில்லை. அவ்வாறு பயன்படுத்தித் தூக்கி எறிகிற (யூஸ் அண்ட் த்ரோ) பழக்கத்திற்குக் குழந்தைகள் அடிமையாகி வருவது அவ்வளவு நல்லதல்ல. பொருள்களைப் பயன்படுத்துவதுபோலவே பின்னாட்களில் மனிதர்களைப் பயன் கொள்ளவும் அவர்கள் பழகிவிடுவார்கள். இன்றளவும் மறுசுழற்சிக்குப் பழக்கப்படாமல் வீணடிக்கப்படும் பொருள்கள்தாம் எவ்வளவு?

இளம் வயதில் கேட்டதும் கிடைத்துவிடும் என்பதை அனுபவித்துப் பழகிய பிள்ளைகள் பிற்காலத்தில் தன் தேவைக்குரியன கிடைக்காதபோது ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்துவிடுகிறார்கள். இளவயதில் அடம் பிடிக்கப் பழகிய அவர்கள் பிற்காலத்தில் மிரட்டவும் தயங்காதவர்கள் ஆகிவிடுகிறார்கள். முரட்டுத்தனமும் முன்கோபமும் அவர்களை எந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்றே தெரியாது. அதிலும் இப்போது அதிகரித்துவரும் மதுப்பழக்கம் அதீத ஆபத்தை விளைவிக்கும் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள்.

விரும்பும் ஒரு பொருள் கிடைப்பதற்குமுன் தோன்றும் ஏக்கம், அது குறித்த கனவு, கிடைத்த பின் ஏற்படுகிற மகிழ்ச்சி, அதனை முழுமையுறத் துய்ப்பதில் ஏற்படுகிற அனுபவம் எல்லாமும் கேட்டவுடன் கிடைத்துவிடுகிறபோது, கிடைக்காமல் போய்விடுகிறது. அதன் மீதான மதிப்பும், வாங்கிக் கொடுப்பவர் மீதான மரியாதையும் குறைந்து போய்விடுகிறது.

என்னதான் உரிய விலை கொடுத்து ஒரு பொருளை வாங்கினாலும், அதனை முறைப்படத் துய்த்துப் பயன் கொள்ளாமல் தூக்கி எறிவது, அப்பொருளை உருவாக்கியவர்களின் உழைப்பை அவமதிக்கும் ஒரு சமுதாயக் குற்றம் அல்லவா? இது பிள்ளைப் பருவம் முதலே உணர்ந்து களையப்பட வேண்டியது கட்டாயமல்லவா?

வாழ்வின் தேவை கருதி நடக்க வேண்டிய கொண்டாட்டங்கள், வலுக்கட்டாய நிர்ப்பந்தங்களால் தவிர்க்க முடியாத தேவையை உண்டுபண்ணுகிறபோது, விளைவுகள் விபரீதமாகி விடுகின்றன. ஊக்கப்படுத்துகிறோம் என்கிற நிலையில் அவ்வப்போது பரிசுகளை அறிவிப்பதுகூட, ஒருவகையில் கையூட்டுப் பழக்கத்தை குழந்தைகளுக்குக் கைமாற்றிக் கொடுப்பதாக ஆகி விடுகிறது.

அன்றாடக் கடமைகளைத் தவறாமல் நிறைவேற்றுவது வேறு ஆர்வ மிகுதியால், தன் திறமைகளை வெளிப்படுத்தும் போட்டிகளில் பங்கேற்பது வேறு. கடமை உயிர்ப்பண்பு திறமைகளைப் புலப்படுத்துதல் உயர் பண்பு. அத்தகு திறன்களும் கடமைகளைச் செறிவுறச் செய்வதற்கு உறுதுணையாக வேண்டும். ஆனால், கடமை புரிவதே திறமை என்பதான நிலை இப்போது மலிந்து வருகிறது. அதனால் கையூட்டுக் கொடுத்தால்தான் எதுவும் நடக்கும் என்பதை நியாயப்படுத்தும் போக்கு வளர்கிறது.

குழந்தைகள் விஷயம் இவ்வாறு இருக்க,தெய்வத்தைக் கொண்டாடும் மரபிலும் பகட்டும் படாடோபமும் மிகுந்து விட்டன.

அன்பு என்னும் தாய் ஈன்ற அருமைக் குழந்தை அருள். அதனை வாரிவழங்கும் தெய்வத்திற்கு எந்தவொரு கையூட்டும் வேண்டியதில்லை. பெற்ற அருளுக்கு பிரதிபலனாக அன்பைச் செலுத்துகிற முறைதான் பக்தியெனும் பெயர் தாங்கி வழிபாடாக எழுகிறது.

# அபிவிருத்தியை எதிர்பாக்கலாமோ?



கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டிலை யிருந்து வெளிக்கிட்டு பாதிவழியிலைதான் ஞாபகம் வந்துது கொண்டுபோன சண்டி இலையை மாஸ்ரரிட்டைக் குடுக்க மறந்த விசயம். திரும்பிப் போனன். 'என்னப்பா கதிரேசு கதையை இடையிலை விட்டிட்டுப்போக மனமில்லைப் போலை?' எண்டு முருகேசர் சிரிக்க மற்றவையும் சிரிச்சினம். நடந்ததைச் சொன்னன். 'சரி சரி கதிரேசு வந்தனீர் இருமன்... கதை முடியேல்லை...' எண்டு சிர்ச்சார். இருந்துகொண்டன்.

சுதன் 'இடமாற்றம் எண்டிறது ஆருக்காக எண்டதே இப்ப தெளிவில்லாமலுக்கல்லே கிடக்குது?' எண்டான் எரிச்சலோடை. 'ஏனடாப்பா இது கதிரையளைப் பாதுகாக்கத்தான்...அதிலையும் உனக்கு டவுட்டோ?' எண்டு ஒருத்தன் கேட்டான். 'தம்பி இடத்தை மாத்திறதுக்கும் கதிரைக்கும் சம்மந்தமோ?' எண்டு கேட்டார் தம்பர்.

'சம்மந்தமில்லாமலோ எல்லாம் நடக்குது? வருசம் வருசம் அதது அப்பிடியப்பிடியே நடக்கவேணும்...அப்பதான் அந்த நிர்வாகம் சரியாய் நடக்குதெண்டு அர்த்தம். இந்த வருசத்தான் இடமாற்றத்தை வருசம் முடியக்கு முன்னம் செய்யிறதோ எண்டால் வேறையெப்பதான் செய்யிறது?' எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க 'இது விளங்காத சில அதிபருகளுக்கு ஒரு பெரியவர் உப்பிடித்தான் சொல்லியிருக்கிறார்.' எண்டான் ஒராள்.

'அந்த மனேச்மென்ற் இந்த அனேச்மென்ற் எண்டு கொழுத்தி யெறியிற அதிபர்மார் இருக்கிற வாத்தியாரை வைச்சு சரிவரப் பயன்படுத்தத் தெரியாத மாதிரியல்லே நிலமையிருக்கு? அவர்தான் வேணும் இவர்தான் படிப்பிப்பார் கணக்குகளை உவர்தான் செய்வார் எண்டல்லே குழந்தைப் பிள்ளையள்

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே
என்று தாயுமானவரின் பக்தியுள்ளம் பரிந்து பாடுகிறது.

இவற்றின் புறவெளிப்பாடே பூசனை. சிறப்பொடு செய்யப்படும் பூசனைகள், வானத்து மழை நீரை வையகத்துக்குக் கொண்டுதரும் வல்லமை மிக்கவை என்கிறது திருக்குறள். காவிரிப்பூம் பட்டினத்தில் ''இந்திர விழா' எடுக்கும் முறை எப்படிப்பட்டதென்று எடுத்தியம்புகிறது ''சிலப்பதிகாரம்'. சூழலியல் சார்ந்து நடைமுறைப்படுத்தப் பெறும் திருவிழாக்கள், ஆடம்பரத்திற்கு இடம் கொடுத்து, இப்போது அல்லாடிக் கொண்டிருக்கின்றன.

அக்காலத்தில் மக்கள் தொகை குறைவு என்பதோடு, வழிபாட்டுத் தலங்களும் இயற்கையோடு இணைந்து இயல்புற அமைந்திருந்தன. இப்போதோ, செயற்கை உபகரணங்கள் மிகுதியாகிவிட்டன. நெரிசல், தேவைகளின் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக, தூய்மைக் குறைவு மிகுந்து வருகிறது. பக்தர்கள் பண்ணுகிற பூசனைகளில் இன்றியமையாதது தூய்மை பேணல் என்பதை மறந்துவிடலாகாது.

ஆண்டுக்கு ஓரிருமுறை நடைபெறும் திருவிழாக்களின் ஆடம்பரச் செலவினங்களை முறைமைப்படுத்தினால், அன்றாடத் தேவைக்கான செலவினங்களைச் சீருறச் செய்துவிட முடியும் என்பது அனுபவம்.

நாள் வழிபாட்டுக்குத் தேவையான திருவிளக்குகளுக்கு எண்ணெய்கூட இல்லாது சிரமமுறும் சிற்றூர் ஆலயங்களில், சிறப்புத் திருவிழாக்கள் நடத்தப்படுகிறபோது ஒளியூட்டப்பெறும் ஆடம்பர மின் விளக்குகள்தாம் எத்தனை எத்தனை? ஆர்ப்பாட்டங்கள்தாம் எவ்வளவு?

நடமாடும் கோயில்களாக விளங்கும் உயிர்களுக்கு நல்லுதவி செய்வதற்காகப் படமாடும் கோயில்களை நிர்மாணித்தனர் முன்னோர். அவற்றின் இயல்பு கெடாது பராமரிப்பதுகூடத் திருப்பணி செய்யும் புண்ணியத்தைத் தரும்.

பிறவிப்பிணியைப் போக்கும் வழிபாட்டுத் தலங்களில் உடற்பிணி போக்கும் புனிதத் தீர்த்தங்களையும், மலர்பூத்துச் சொரியும் நந்தவனங்களையும் பேணுவதுகூட வழிபாட்டுநெறிதான் என்பதைப் பெரியபுராணத்து அடியார்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். நடைமுறைப்படுத்திச் சிறந்திருக்கிறார்கள்.

உழவாரப் படை தாங்கிய திருநாவுக்கரசர் பெருமானும், பிறக்கும்பொழுதே கண்காணா மாற்றுத் திறனாளியாக இருந்த போதிலும் திருவாரூர்த் திருக்குளம் கல்லிய தண்டியடிகளாரும் நமக்கு உணர்த்திய மரபு மீளவும் பின்பற்றத் தகுந்தது.

பாவம் செய்துவிட்டுப் பரிகாரம் தேடுவதை விடவும், பாவமே புரியாமல் பயனுடைய வண்ணம் ஆவன செய்யப் பழகிவிட்டால், அனைத்தும் நன்றாகுமன்றோ? அதனால் குற்றங்களை மறந்துவிடுகிற குழந்தைகளையும், மன்னித்து விடுகிற தெய்வங்களையும் கொண்டாடுகிற விதத்தில் நாம் கவனத்தைச் செலுத்துவது அவசியம்.

மாதிரியல்லே வலயத்திலை நிண்டு அழுகின மாம்?' எண்டு சிரிச்சான் ஒராள். 'உவையைத் தான் விசயந்தெரிஞ்ச ஆக்களெண்டு நம்பிக் கொண்டிருக்கிறம்' எண்டுது இன்னோராள் எரிச்சலோடை.

'உதுகள் ஒரு பக்கம் ஒரு தவணைச் சோதி னைக்கு மூண்டாந்தரம் ரைம்ரேபிள் வந்திட் டுது... அது ரீச்சேஸ் மாறிப்போறதுக்கான 19ம் திகதிதான் முடியுது... அதிலையும் ஒஎல் காறற்றை தமிழ்... மூண்டு பேப்பர்...' எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க 'முழுப்பிள்ளை யளும் எழுதுற பாடம் திருத்தி றிப்போட் குடுக்கிறதுக் கெண்டு இனி அதுகும் ஒரு பிரச்சனையல்லே?' எண்டு முடிச்சான் ஒராள். 'சோதினையையும் நடத்தத் தெரியேல்லை... வாத்திமாரை மாத்த வும் தெரியேல்லை... அப்பபின்னை என்னதான் தெரியும்?' எண்டுகேட்டுச் சிரிச்சார் முருகேசர்.

'அதுக்கும் வழி தெரியாமலோ? றிப்போட் டைக் குடுத்திட்டால் இடமாற்றத்தை கோரிப் பெறுறதுக்கு ஒண்டும் இருக்காதல்லே உறுதிப் படுத்திக்கொண்டு போங்கோ எண்டு அதி பர்மாற்றை வைபர்குறூப்பிலை போடலா மல்லே?' எண்டு அவ்வளவு நேரமும் கதைக் காமலிருந்த ஒராள் சொல்லிச்சுது. 'தம்பியவை இடம் மாறிப் போகவேண்டியாக்கள் வாத்தி மார்.... அதிபர்மாருக்குப் போட்டு என்ன பிர யோசனம்?' எண்டு கேட்டன். 'அப்பதானே கதிரேசு நீரும் அதிபரும் சண்டை பிடிப்பியள்?' எண்டு சிரிச்சார் மாஸ்ரர். 'கொழுவி விட்டுக் கூத்துப்பாக்கத் தெரியுமெண்டு சொல்லுறியளோ மாஸ்ரர்?' எண்டு முருகேசர் சொல்ல எல்லா ருமே சிரிச்சம்.

'இப்பிடியே எல்லாம் குழப்பத்தோடைதான் இருந்துதெண்டால் பிள்ளையளின்ரை நிலைமை என்ன? இப்பிடியோ விளையாட்டுத்தனமாய் இருக்கிறியள்?' எண்டு கொஞ்சம் கோபமாய்த் தான் கேட்டன். 'உது கதிரேசு ஒரு பிரச்சனை யான விசயந்தான்... வெட்டொண்டு துண்டு ரண்டெண்டு விசயங்களை சட்டுப்புட்டெண்டு செய்திடவேணும்... உவையென்னடாவெண் டால் ஆறப்போட்டால் தானாயே தீரும் அல் லது மறந்த கதையாகிப் போகிடுமெண்டு நினைக் கினம்போலைத்தான் கிடக்குது. ஒராள் ரண்டு பேரின்ரை ஆளுமைக் குறைபாடுகள் எப்பிடி எல்லாரையும் பாதிக்குதெண்டு பாத்தியளே?' எண்டு பெருமூச்சொண்டை விட்டார் மாஸ்ரர்.

'அதுசரி இப்ப 30ஆம் தேதி ஒரு பாடம் நடந்து அடுத்த பாடம் நடக்கிற எட்டாந்தேதி வரைக்கும் லீவெண்டு சொல்லயல்லே பெடி யள் கூக்காட்டினவங்கள்?' எண்டுது ஒராள். 'எங்கடை ஸ்கூலிலையும் உப்பிடித்தான்' எண்டு துமற்றொராள். 'பிள்ளையளின்ரை கதையை விடு எங்கடை ரீச்சரொளாளே லீவுகள் தாரா ளமாய் வருகுதெண்டு சந்தோசப்பட்டவ' எண்டு சுதன் சொல்ல எல்லாருமாச் சிரிச்சம். 'அப்ப தம்பியவை அபிவிருத்தி எண்டிற விசயத்தை எழுதிவைச்சு வாசிச்சுத்தான் பாக்கலாம் போலை?' எண்டுகொண்டு சண்டியிலையைக் குடுத்திட்டு வந்திட்டன்.

*சமையல் சமையல்*



# அவல் தயிர்சாதம்



இந்த வாரம் நாம் பார்க்கவிருப்பது சமைக்காத உணவு ஒன்றைப் பற்றியது. அடுப்புத் தேவையிராத உணவுதான் இந்த அவல் தயிர்சாதம். உடனடியாகச் செய்துவிடக்கூடிய செயற்கை உணவுகள் பல சந்தையில் கிடைக்கும்போது உடனடியாகச் செய்துவிடக்கூடியதாகக் கைகளில் இருக்கின்ற இயற்கை உணவு இது. ஆகவே ஆரோக்கியம் மிக்கதும், ஊட்டங்கள் நிறைந்ததும்கூட.

**தேவையான பொருள்கள்**

அவல் 100 கிராம், தேங்காய்ப்பால் (முதல்) அரைக் கப், இஞ்சி - ஒரு துண்டு, சீரகம் - ஒரு மேசைக்கரண்டி, பச்சை மிளகாய் - 2, தயிர் ஒரு கப், உப்பு, வெங்காயம், மல்லி இலை ஆகியன சிறிதளவில்.

**எவ்வாறு செய்வது?**

இதை ஆக்குவது வெகுசுலபம். முதலில் அவலை 5 தொடங்கி 10 நிமிடங்கள் வரை நீரில் ஊற வையுங்கள். பின்னர் வடித்தெடுத்து அவலுடன் தேங்காய்ப்பாலையும் தயிரையும் சேர்த்துக் கலக்குங்கள். இஞ்சி, சீரகம், பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சொர சொரப்பாக அரைத்துக் கொள்ளுங்கள். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளுங்கள். அவல் கலவையுடன் ஒரு தேக்கரண்டி இஞ்சி, வெங்காயம், மல்லித் தழை ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்குங்கள். இறு தியில் உப்பைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள். சுவையான அவல் தயிர் சாதம் தயார்.

# அனல் மேலே பனித்துளி

## அனைவரும் பார்க்கவேண்டிய படைப்பு

பாலியல் வன்வுணர்வால் பாதிக்கப்படும் ஒரு பெண் அதனை இந்தச் சமூகத்தில் எப்படி எதிர் கொள்ளவேண்டும் என்பதை அழுத்தம் திருத்த மாகச் சொல்லும் படைப்பு 'அனல் மேலே பனித் துளி'. பெண்ணுடல் அவளது ஆயுதமே தவிர அடுத்தவர்க ளுக்கு ஆயுதமாக அனுமதிக்கக் கூடாது முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்கிறது படம்.

தன்னுடன் பணியாற்றும் பெண்ணின் திருமணத்திற்காக சென்னையிலிருந்து புறப்பட்டு கொடைக்கானல் செல்கிறார் மதி (ஆன்ட்ரியா). திருமணம் முடிந்து அந்த பகுதியைச் சுற்றிபார்க்கச் செல்லும் அவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார். அடையா ளம் தெரியாத அந்த நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண் டனை பெற்றுத்தர அவர் நடத் தும் அகம் - புறம் சார்ந்த போராட்டமே படத்தின் திரைக் கதை. படம் சோனி லிவ் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது.

வெற்றிமாறன் தயாரித்திருக்கும் இப்படத்தை கெய்சர் ஆனந்த் இயக்கியிருக்கிறார். விறுவிறுப்பு குறையாமல் பாலியல் வல்லுறவுக்குப் பிறகான ஒரு பெண்ணின் மன ஓட்டத்தை கச்சிதமாக திரைக்கதையாக்கியிருப்பது பாராட்டுக்குரி யது. அதற்கான முகமாக ஆன்ட்ரியாவின் நடிப்பு யதார்த்தின் நெருக்கத்தை கூட் டுவதால், நம்மால் எளிதில் திரைக்குள் அகப்பட முடிகிறது.

ஆன்ட்ரியா முகத்தில் தோன்றும் பதற்றமும், பயமும், அவர் எதிர் கொள்ளும் சவாலுக்கான மனநிலை யின் தாக்கமும் நம்மையும் தொற்றி அகல மறுக்கிறது. மொத்தக் கதை யின் ஆன்மாவாக உணர்ச்சிகளின் வழியே தன்னிலையை சிறப்பாக கடத்தியிருக்கிறார் ஆன்ட்ரியா. அவ ரைத் தாண்டி அழகம் பெருமாள்,



இளவரசு இருவரின் நடிப்பு கதாபாத்திரத்தன்மையை மெருகேற்றுகிறது. அழுத்தமான நடிப்பால் சீனியர் நடிகர்கள் என்பதை உணர்த்துகின்றனர். ஆன்ட்ரியா வின் காதலனாக வரும் ஆதவ் கண்ணன் கதாபாத்திர குணாதிசயங்கள் யதார்த்த உலகில் நம்மை பொருத்திப் பார்க்கத் தூண்டுகிறது.

படத்தின் ஒரு கட்டத்திலேயே குற்றவாளிகள் யார் என்பதை பார்வையாளர்களுக்குச் சொல்லிவிடுவார் இயக்குநர். என்றாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களா என்பதைச் சுற்றிப் பின்னப்பட்டி ருக்கும் மீதித் திரைக் கதையும் அதற்கு முன்பான பாதியைவிட எந்தவிதத்திலும் விறுவிறுப்புக் குறை யாத வகையில் அமைக்கப்பட்டிருப்பதுதான் படத்தின் வெற்றி.

படம் அழுத்தமான பல கேள்விகளை எழுப்பி விடை காணச் சொல்கிறது. "ஆண்கள் என்றாலே அதிகாரம் தான். அதுவும் அதிகாரத்துல இருந்தா?", "நம்மூர் பொண் ணுங்க துப்பாக்கி காட்னா கூட நெஞ்ச நிமிர்த்தி நிப் பாங்க. துணிய அவுத்துட்டா ஒதுங்கி ஒடுங்கி போயிடு வாங்க", "மானம்ங்குறது நம்ம வாழ்ற வாழ்க்கையில இருக்கு" போன்ற வசனங்கள் கவனம் பெறுகின்றன. ஒரு பெண்ணை ஒடுக்க அவளது உடலையே ஆயுத மாக்குவது, பாதிக்கப்பட்ட பெண்ணையே குற்றவாளி யாக்குவது, எது மானம்? எது அவமானம்? பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிகளுக்கான சட்டத்தின் ஓட்டைகள் எனப் பலவற்றைப் பேசும் விதம் படத்தை கூர்மையாக்குகிறது.

வெறும் சட்டப் போராட்டம் என்ற புள்ளியில் நீர்த் துப் போகாமல், பாதிக்கப்பட்ட பெண்ணின் அகம் சார் ந்த உளவியல் ரீதியான பதற்றத்தையும், போராட்டத் தையும், சிக்கலையும் பேசியிருப்பது, மெதுவாக நக ரும் திரைக்கதையின் தொந்தரவில்லாத காட்சியமைப் பைக் கட்டியெழுப்புகிறது.

சந்தோஷ் நாராயணன் இசையில் உமா தேவியின் வரிகளில் 'நான் இங்கே' பாடலும், அதன் காட்சிய மைப்பும் ரசிக்க வைக்கின்றன. வேல்ராஜ் ஒளிப்பதிவு காவல் நிலைய காட்சிகளின் இருள் தன்மையின் அடர்த்தியையும், அதுக்கே உண்டான மனநிலையை யும் உருவாக்கித்தருகின்றன. காட்சிகளுடன் பின்னணி இசை ஒன்றியிருப்பது கூடுதல் பலம்.

ஆடைக் கட்டுப்பாடு குறித்த கேள்வியும், பெண்ணு டலை அவர்களுக்கு எதிரான ஆயுதமாக்கும் போக்கு குறித்தும் பரப்புரை நெடி இல்லாமல் திரைக்கதையாக்கி யிருக்கும் படத்தில் இறுதிக் காட்சியின் உரையாடல் வகுப்பெடுக்கும் உணர்வை தருவதைத் தவிர்த்திருக்க லாம். பாதிக்கப்பட்ட பெண்ணை குற்றவாளிகளுக்கு அருகிலேயே காவல் துறை அதிகாரி விட்டுச்செல்வது தர்க்க ரீதியான நெருடல். அதேபோன்று பாதிக்கப்பட்ட பெண்ணின் மன உழைச்சலை, சிதிலத்தை காட்சிப்படுத் தும் திரைக்கதை அவளது துணையான ஆண் அத னால் எந்தச் சலனமும் அற்ற ஒருவனாகத் தெளிந்த நீரோடையாக இருப்பதாகக் காட்டுவதும்கூட ஆணா திக்க வெளிப்பாடுதானோ என்ற சிந்தனை எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

50 வருடங்களுக்கு முன்பு இருந்தமாதிரி இப்போது எல்லாமும் இல்லை, அதனால் ஆன்ட்ரியாவின் காதல னும் பழைய அல்லது பழைமைவாதக் காதலான இல்லை என்கிற நியாயத்தை யதார்த்தம் ஏற்றுக்கொள்ளுமா? தமிழ் இளம் சமூகம் அந்தளவுக்கு முற்போக்கானதாகி விட்டா?



உயிரினும் மேலானது மானம், ஆனால் அந்த மானம் தான் எது என்கிற கேள்வியை எழுப்புகிற இந்தப் பட த்தை ஒவ்வொருவரும் பார்த்து அந்த மானம் என்பது என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

# கலகத் தலைவன்

## கலக்கத்தைக் கொடுக்கவில்லை



பெருநிறுவனத்தை எதிர்த்து களமாடும் ‘காமன் மேன்’ ஒருவனின் போராட்டம்தான் ‘கலகத் தலைவன்’. வஜ்ரா என்ற கார்பரேட் நிறுவனம் தன்னுடைய புதிய கனரக வாகனம் ஒன்றை சந்தையில் அறிமுகப்படுத்தும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஆனால், அந்த வாகனம் உமிழும் மாசு அளவு அனுமதிக்கப்பட்டதைவிட அதிகம் என்கிற இரகசியம் வெளியில் கசிய, நிறுவனம் அதிர்ச்சியடைகிறது.

இதுபோன்ற ரகசியங்களை கசியவிடும் ‘விசில் ப்ளோயர்கள்’ எனப்படும் உளவாளிகளை கண்டறிந்து அவர்களை தடயமின்றி அழிக்கும் பொறுப்பு அர்ஜுனுக்கு (ஆரவ்) கொடுக்கப்படுகிறது. அவர் தன் வேட்டையைத் தொடர, அது திருமாறன் (உதயநிதி ஸ்டாலின்) வாழ்க்கையில் எந்த மாதிரியான தாக்கத்தை நிகழ்த்துகிறது? இந்த ‘விசில் ப்ளோயர்கள்’ யார்? அவர்களின் நோக்கம் என்ன? இதுதான் ‘கலகத் தலைவன்’ படத்தின் திரைக்கதை.

இம்முறை கார்ப்பரேட் அரசியலை கையிலெடுத்து திரையில் களமாடியிருக்கிறார் இயக்குநர் மகிழ்திருமேனி. பெருநிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்படும் அரசு, இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியில் நடக்கும் தனியார் மயமாக்கல் கடைக்கோடி மனிதனை பாதிப்பது, சந்தைப் பொருளாதாரம், கார்ப்பரேட் உளவாளிகள், சுற்றுச்சூழல் பாதிப்பு என பலவற்றையும் பேச முயன்றிருக்கிறார் இயக்குநர். அதை வெறும் பரப்புரைப் பாணியில் இல்லாமல் சுவாரஸ்யமான திரைக்கதையுடன் திருப்பங்களுடன் கொண்டு சென்ற விதத்தில் படம் கவனம் பெறுகிறது.

படத்தின் முதல் பாதி விறுவிறுப்புடன் பயணிக்க, அதன் வேகத்தை காதல் காட்சிகளும், பாடல்களும் வேண்டுமென்றே தணிக்கின்றன. மொத்த காதல் காட்சிகளை நீக்கியிருந்தால் இன்னும் அடர்த்தி கூடியிருக்கும். நாயகியிடம் உதயநிதி சொல்லும் கைப்பை உளவியல் மட்டும் பார்வையாளர்களிடையே எடுபடுகிறது. மற்றபடி காதல் காட்சிகளும், பாடல்களும் திணிப்பேயன்றி கதையோட்டத்திற்குப் பயனளிக்கவில்லை.

குறிப்பாக, இடைவேளைக்கு முன்பு நடக்கும் சம்பவங்களும், திருப்பமும், காட்சியின் சூடும் வெகுவாக ரசிக்க வைக்கிறது. மூன்று முக்கிய பாத்திரங்களின் வழி மொத்தப் படமும் நகர, அதை எழுதியிருக்கும் விதத்தால் திரைக்கதை கனக்கிறது.


பெரிதாக அலட்டிக்கொள்ளாத உதயநிதியின் உடல்மொழி படத்துக்குப் போதுமானதாக இருக்கிறது, அளந்து பேசும் வார்த்தைகள் என திருமாறனாக தனது பணியை செவ்வனே செய்திருக்கிறார். அவரைவிட கூடுதல் கவனிப்பை ஏற்றி எதிர்மறை கதாபாத்திரத்தை எழுதியிருக்கும் விதம்தான் படத்தை சுவாரஸ்யமாக்குகிறது. அந்த வகையில் கட்டுடல், கூரிய பார்வை, கருணையில்லாக் கண்கள் என மிரட்டலான நடிப்பை வெளிப்படுத்துகிறார் ஆரவ்.

ஆடு - புலி ஆட்டத்துக்கான திரைக்கதைக்கான கதாபாத்திர வார்ப்பு கச்சிதமாக கைகொடுத்திருக்கிறது. திடீரென திரையில் தோன்றும் கலையரசன் அழுத்தமான நடிப்பை பதியவைக்கிறார்.

வழக்கமான திரைக்கதைப் பாணியிலிருந்து தப்பிக்காத ‘கலகத் தலைவன்’ நிதி அகர்வாலையும் காதல், பாடல்களுக்காக மட்டுமே பயன்படுத்தியிருக்கிறது. தவிர, ‘கிராமத்துல இருக்குறவங்களுக்கு இலவச மருத்துவ சேவை’ என்பதை வழக்கம்போல ஒரு பரிதாப உணர்வுக்காகச் சேர்த்து, மேலோட்டமாக எழுதப்பட்டிருக்கிறது நிதி அகர்வால் கதாபாத்திரம்.

ஸ்ரீகாந்த் தேவா, ஆரோல் கோரலி பின்னணி இசை சில இடங்களுக்கு ஓகே என்றாலும், ஒட்டுமொத்தமான படத்தின் பசிக்கு சோளப்பொரியாக எஞ்சி நிற்கிறது. பாடல்கள் எதுவும் மனதில் தேங்கவில்லை. தில்ராஜ் ஒளிப்பதிவும், ஸ்ரீகாந்த் படத்தொகுப்பும் தொழில்நுட்ப ரீதியாக குறையை வைக்காமல் கதையை கடக்க உதவியிருக்கிறது.

‘ஒருத்தன் நாலு பேர அடிக்க முடியாது’ என சண்டையில் நியாயத்தை சேர்த்திருக்கும் இயக்குநர், அதற்காக புரூஸ் லீயின் வார்த்தைகளை பயன்படுத்தியது ஈர்ப்பு. இரண்டாம் பாதியிலும் விறுவிறுப்பை தக்கவைக்க முயன்றிருக்கும் திரைக்கையில், இறுதிக்காட்சிகள் இழுத்துக்கொண்டு போய் சேர்த்தது அயற்சி. அனைத்து சிசிடிவி காட்சிகளையும் அசால்ட்டாக கைப்பற்றுவது, போன் நம்பர்களை ஹேக் செய்வது, தகவல்களை பிங்கர் டிப்பில் வைத்திருப்பது போன்ற காட்சிகள் செயற்கைத்தனத்துடன் துருத்தி நிற்கின்றன.



18

# வாரம் ஒரு சொல்....!

வட்டார மற்றும் பிராந்திய மொழிகளை ஆவணப்படுத்தும் நோக்கத்தோடு செம்மண் அறிமுகப்படுத்தி வரும் தொடரில் இந்த வாரம் இடம்பெறும் சொல்,

## "ஆர்...?"

யாழ்ப்பாணத்தவர்களால் பேசப்படும் தமிழில் வழுவான சில சொற்களும் பாவனையில் உள்ளன. இதில் 'ஆர்...?' என்ற சொல் யார்...? என்பதற்குப் பதிலாகப் பயன்பாட்டிலுள்ளது. இந்தச் சொல்லை முஸ்லிம்கள் 'தார்' என்று கூறுகிறார்கள். மலையகத் தமிழர்கள் 'யாரு...?' என்கிறார்கள். இந்தச் சொல்லைப் பிழையாக உச்சரிக்கிறோம் என்ற எண்ணம் படித்தவர்கள் மத்தியிலும் கூடக் காணப்படாத அளவுக்குப் பேச்சு வழக்கில் தனக்கெனத் தனியிடம் பிடித்திருப்பது இதன் சிறப்பு.

'ஆர் அந்த வீட்டுக்காரர்?''
'ஆர் வந்து அதை எடுத்துக்கொண்டு போனது?'
'ஆரார் கலியாண வீட்டுக்கு வந்தவை?'
'ஆர் கொள்ளி வைச்சது?'
'ஆர் இந்த மருந்தைக் குடிக்கச் சொன்னது?'
'ஆர் அங்க நிக்கிறது?'
'ஆர் நடிச்ச படம்?'
'ஆர் வந்து கூட்டிக்கொண்டு போனது?'
'அவவுக்கு ஆர் உதவி?'
'ஆர் இறங்கினாலும் நிலமையில் மாற்றம் வராது?'
'ஆர் அந்தப் பாடம் படிப்பிக்கிறது?'
'ஆர் கடைசியா பஸ் ஏறினது?'
'ஆர் இதை உடைச்சது?'
'ஆர் சொன்னாலும் அவன் கேட்க மாட்டான்' இவ்வாறாகப் பல சந்தர்ப்பங்களில் கேள்விக்குறியுடன் அமைந்து விடுகிறது இந்தச் சொல்.

யார் என்பதற்குப் பதிலாக ஆர் என்று அழைக்கின்ற இந்தச் சொல் வடிவத்தையே யானை என்பதற்குப் பதிலாக ஆனை என்று பயன்படுத்துகிறார்கள். யானை விழுந்தான் என்பதை ஆனைவிழுந்தான் என்பதும் யானையிறவு என்பதை ஆனையிறவு என்பதும் இவ்வாறே.

# ஏன்...?
# அப்படி...?

நட்சத்திரா

39



## பட்டப் பகலில் வாகனங்களின் மின்விளக்குகள் ஒளிர்வது

நம்மூர் வீதிகளில் பகலிலும் தமது மின் விளக்குகளை ஒளிரவிட்டபடி பயணிக்கின்ற வாகனங்கள் பலதைக் காணமுடியும். அதிலும் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களே பகலில் வெளிச்சம் பாய்ச்சித் திரிவது அதிகமாக இருக்கிறது. பகலிலும் தமது மின்விளக்குகளை ஒளிரவிட்டவாறு பயணிக்கின்ற மோட்டார் சைக்கிள்களை வீதியில் காண்போர் மோட்டார் சைக்கிளின் மின் விளக்கு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது, அதை அணையுங்கள் என்பதைச் சமிக்ஞை காட்டித் தெரிவிப்பர். இரவில் இருட்டு நிலவுவதால் மின்வெளிச்சம் கட்டாயமானது. ஆனால் பகலில் ஏன் மின் வெளிச்சம்...? ஆனாலும் அந்த மின் விளக்கை அணைக்க முடியாது. அதற்குக் காரணம் அணைக்க முடியாத தொழில்நுட்பத்துடன் மோட்டார் வாகனத்தில் அது பொருத்தப்பட்டிருப்பதே ஆகும். மோட்டார் வாகனத்தை இயக்கியதும் மின்விளக்கும் இயங்கத் தொடங்கிவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை கடந்த சில வருடங்களாக உற்பத்தி நிறுவனங்கள் தயாரிக்கின்றன. ஏன் அப்படி...?

நமது நாட்டிலுள்ள மோட்டார் சைக்கிள்கள் அனைத்துமே இந்தியத் தயாரிப்புகள். பஜாஜ், ரி.வி.எஸ், ஹீரோ, ஹீரோகொண்டா, கொண்டா, என இந்தியாவிலுள்ள மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனங்களின் இறக்குமதிகளே இங்கு அதிகம். இந்தியாவின் டெல்லி உள்ளிட்ட சில பெரு நகரங்கள் காற்று மாசால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதனாலும் பனிமூட்டங்கள் காணப்படும் பருவகாலங்களிலும் பெரு நகரங்களில் பகலில் சூரியவெளிச்சம் குறைவாகக் காணப்படுகிறது. ஒருவித புகைமண்டலம் போல நகரம் இருப்பதால் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன. அதன் காரணத்தால் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் எந்நேரமும் ஒளிரும் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படவேண்டும் என்று இந்திய அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளது. இந்தச் சட்டம் காரணமாகவே எந்நேரமும் ஒளிரும் வகையில் மோட்டார் சைக்கிள்களின் மின்விளக்கு

களைத் தயாரிப்பு நிறுவனங்கள் தயாரிக்கின்றன. டெல்லி தவிர்ந்த பெரும்பாலான இந்திய மாநிலங்களில் இந்த நிலை இல்லாவிடினும் தயாரிப்பு நிறுவனங்கள் அனைத்துத் தயாரிப்புகளிலும் தானியங்கி முறையைப் புகுத்திவிட்டதால் (ஓட்டமற்றிக் ஹெட்லைற் சிஸ்ரம்) சகல மாநிலங்களிலும் மோட்டார் வாகனங்கள் பகலிலும் ஒளி வீசித் திரிகின்றன. நமது நாட்டவர்களும் அவற்றையே இறக்குமதி செய்வதால் இங்கும் பகலில் அவை ஒளி வீசுகின்றன.

ஒரு சில வாகனதாரர்கள் அந்த தானியங்கித் தொழில்நுட்பத்தைத் தற்காலிகமாகத் துண்டித்து ஆளி ஒன்றை மேலதிகமாகப் பொருத்தி மின்விளக்கை அணைக்கும் வழிவகையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் தயாரிப்பு நிறுவனங்கள் எந்தவித தொழில்நுட்பத்துடன் அதை நிறுவியுள்ளன என்றோ, அதனால் மின்கலத்துக்குப் பாதிப்பா ? இல்லையா? இயந்திரத்தின் எரிபொருள் நுகர்வு அதிகமாக இருக்குமா? இல்லையா? தொடர்ந்தும் ஒளிர்வதால் மின்குமிழின் ஆயுட்காலம் குறைவானதாக இருக்குமா? இல்லையா? என்பதெல்லாம் மேலும் தேடியறிய வேண்டிய விடயங்கள். ஆனால், ஏன் அப்படி மோட்டார் வாகனங்கள் பகலிலும் ஒளிர்கின்றன என்பதற்குக் காரணம் டெல்லி நகரின் காற்றுமாசு மற்றும் புகை, பனி மூட்டம் மாத்திரமே.

ஐயங்கொண்டான் சுவாமிகள்

86

# எமையறிதல்



நாம் விரும்புகிற விடயம் உண்மையெனவும் விரும்பாதது பொய்யெனவும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு கற்பித்ததும் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதும் அதனையே பிரயோகிப்பதும் அதனையே காவித் திரிவதும் மனம்தான். அந்த மனம்தான் கண்களாலும் காதுகளாலும் வழிப்படுத்தப்படுவதாகவும் அலைக்கழிக்கப்படுவதாகவும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. கற்பிக்கப்பட்டது யாரால்? எவ்விதமாக இது நடந்திருக்கிறது?

இப்போது மீண்டும் எமது உரையாடலின் தொடக்க இடத்திற்குச் செல்லவேண்டியுள்ளது. இந்தக் கற்பிதம் என்பது என்ன? அது ஒரு சடப்பொருளா? அப்படி என்னதான் அது? எமது மனதுள் படிப்படியாகவோ சடுதியிலோ புகுத்தப்பட்டு அதையே ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு (மயக்க)நிலை என்று எடுத்துக்கொள்ள முடியும். இது சிறு வயதில் கேட்ட பாட்டி கதைகள், வாசித்த கதைப் புத்தகங்கள், சகபாடிகளது (கேள்விச் செவிக்) கதைகள், நடைமுறை வாழ்வில் கண்ட மற்றும் அனுபவித்த (தற்செயல்) நிகழ்வுகள் என்று நீண்டு பள்ளிக்கல்வியில் பெற்றுக்கொண்ட சில பாடங்கள் எனக் காரணங்களாலானது.

எடுத்துக்காட்டாக மனம் என்பதன் அமைவிடமான அனேகர் எந்தவிதத் தயக்கமுமின்றிச் சுட்டிக்காட்டுவது நெஞ்சைத்தான். இது பல வழிகளில் ஏற்படுகிறது. அதனுள் மேற்குறிப்பிட்டவையும் அடங்கும். ஆயினும் இங்கு குறிப்பிட வந்தது கணித பாடத்தில் சிறுபராயத்தில் மனக் கணிதம் கற்பிக்கப்பட்ட முறையையே. ஐந்தை மனதில் வைத்துக்கொண்டு என்று கூறுமிடத்தில் கையை நெஞ்சின் மீது வைத்துத்தான் கற்பிக்கப்பட்டது. இல்லையா?

அதனது தொடர்ச்சியாகவே காதல் என்பதற்கு இதயத்தைக் குறியிடும் நிலைமையேற்பட்டுள்ளது. காதலென்பது உணர்வு. உணர்விற்றும் இதயத்திற்கும் சம்மந்தம் என்ன? மூளை அதாவது மனம்சார் பிரச்சினையை இடம்மாறி விளங்கி வைத்திருகிறோமே அதுதான் கற்பிதம் வழி ஏற்பட்ட குழப்பம். நிலவு ஒரு துணைக்கோள் என்று அறிவியல்பூர்வமாகப் படித்துவிட்டு பித்தாபிறைசூடியென்று மெய்யுருகி வழிகிறோமே அதுவும் கற்பிதத்தால் ஏற்பட்ட விளைவே.

எதனையும் கேள்விக்கு உட்படுத்துதல் எனபது தொடர்பாக முன்னர் பேசியிருக்கிறோமல்லவா? அவ்வாறு கேள்விகள் எழுவதற்கான முதனிலைத்

# வெள்ளை

**நமது சமூகம் தொழில் ரீதியாகச் சாதிகளை வகைப்படுத்தியிருக்கின்ற சமூகம். அந்த வகையில்தான் இந்த வெள்ளை கட்டுதலில் ஈடுபடுவோரும் உள்ளனர்.**

நம்மூரில் ஒருவர் இருக்கிறார். அவரது பெயர் வெள்ளை. அது அவரது நிஜப் பெயரல்ல. நமது ஊரிலுள்ள பலரும் அவரை அப்படித்தான் அழைக்கிறார்கள். ஆள் எப்படி என்று கேட்டீர்களானால்,... ஆள் சற்று வயதானவர். வயது 60ஐத் தாண்டியிருக்கும். தலை நரைத்துத் தாடி வெளுத்துவிட்டது. அவரது தேகமும் வெள்ளை நிறம்தான். அதுவும் வெளிறிய வெள்ளைபோல இருக்கும். நீர் நிலைகளுக்குள் நீண்டநேரம் நின்று வேலை செய்தால் ஏற்படுமல்லவா? அப்படியிருக்கும்... அவரது உடலிலுள்ள இந்த வெள்ளைகள்தான் அவரை ஊரவர்கள் வெள்ளை என்று அழைழப்பதற்குக் காரணம் என்று அவசரப்பட்டு நினைத்துவிடாதீர்கள். என்னைப்போல நீங்களும் அவசரக்காரி ஆகிவிடுவீர்கள். அப்படி நான் நினைத்தது பிற்காலத்தில் பொய்த்துப்போனது. வெள்ளை ஐயா தளர்ந்துவிட்டார். ஆனால் அவர் செய்கின்ற தொழிலில் இப்போதும் அக்ரிவ்வாகத்தான் இருக்கிறார். அவரது தொழில் என்ன தெரியுமா...? வெள்ளை கட்டுவது...!

ஜிமித்ரா

இறந்த வீடுகளில் அவரை நான் அடிக்கடி காண்பதுண்டு. அங்கெல்லாம் அவர் இறுதிக்கிரியை நடக்கவுள்ள இடத்தைத் தயார்ப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டிருப்பதை அவதானித்திருக்கிறேன். அதிலும் குறிப்பாக வெள்ளை நிறத் துணிகளை, வேஷ்டிகளைக் கொண்டு மேற்கூரை அமைப்பார். சிறிய வெள்ளைக் கூடாரம்போல அது இருக்கும். இதை வெள்ளை கட்டுவது என்றே எல்லோரும் அழைக்கிறார்கள். ஊரில் நடக்கின்ற அமங்கல நிகழ்வுகளின்போது வெள்ளைகட்டுவதை வழமையாகக் கொண்டிருப்பதால்தான் அவருக்கு வெள்ளை என்று பெயர் வந்தது.

நமது மக்கள் மங்கல, அமங்கல நிகழ்வுகளின்போது வெள்ளைத் துணி கொண்டு சிறிய கூடாரம்போல, கொட்டைகைபோல, கூரைபோல வடிவமைக்கிறார்கள். அதை வெள்ளை கட்டுவது என்கிறார்கள். நமது சமூகம் தொழில் ரீதியாகச் சாதிகளை வகைப்படுத்தியிருக்கின்ற சமூகம். அந்த வகையில்தான் இந்த வெள்ளை கட்டுதலில் ஈடுபடுவோரும் உள்னர். இது குடிமை முறையின் செயற்பாடாயும் வெளிப்படுகிறது என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், இந்த தடைகளுள் கற்பிதமும் ஒன்று. அது இப்படித்தான். இது அப்படித்தான். என ஏலவே தீர்மானிக்கப்பட்டதாக எண்ணிக் கொண்டு பின்பற்றவே பழக்கமாகிவிட்டிருக்கிறது. இந்த ஏலவே தீர்மானிக்கப்பட்ட என்பதுதான் கற்பிதமாக உள்ளது. இங்கு ஒரு முரண் உள்ளது. மேலே குறிப்பிட்ட கற்பிதங்கள் உருவாகுவதற்கான காரணிகளில் பழி சுமத்துவதற்கான அருகதையுள்ளவனா நான்?

அந்தக் காரணிகளை முன்னிறுத்தி மறைந்து நிற்கிற வசதியைக் கொண்டவன் தான் நான். கற்பிதம் என்பதிலிருந்து வெளியே வருவதற்காக ஏதாவது செய்திருக்கிறேனா? எண்ணத்திலாவது இருந்துள்ளதா? பகுத்தாயவும் பகுத்துணரவும் மடிந்திருந்தால் கற்பிதம் என்பது காணாமலாக்கப்பட்ட ஒன்றாகவே இருந்திருக்கும். 'கண்ணால் கண்டதும் பொய் காதால் கேட்டதும் பொய் தீரவிசாரிப்பதே மெய்' என்று ஒப்புவிக்கப் பழக்கப்பட்ட நாம் என்றாவது அதனைச் செய்திருக்கிறோமா?

வானத்தில் இத்தனை நட்சத்திரங்கள் உள்ளன என்று யாராவது சொன்னால் நம்பி அதனை மனப்பாடம் செய்து அறிவாளியாக இருக்க விரும்பும் நாமே ஈரவர்ணம் காயவில்லை தொடாதீர் என்று அறிவித்தல் பலகையைப் படித்தவுடன் அதனை உறுதிப்படுத்தத் தொட்டுப்பார்த்துக் கையைக் கறைப்படுத்தத் தவறுவதேயில்லை என்பது சிரிப்பிற்கிடமானதாக இல்லையா? இதுதான் நாம். இப்படியான ஓரிரண்டு விடயங்களில் மட்டும்தான் தீரவிசாரித்தல் இருக்கிறது.

கற்பிதம் என்பது மனதினது உறைவு. கற்பிதங்கள் தன்சுவட்டிலேயே எண்ணங்களை எப்போதும் இட்டுச்செல்கிறது. அதனது மையவிசையிலிருந்து எண்ணம் விடுபட முடியாது அம்மையத்தையே சுற்றிச் சுழலத் தொடங்குகிறது. மனம் அலைவுறுவதாக முன்பொருமுறை பேசியிருக்கிறோம். இப்போது ஒரு மையம் பற்றிச் சுழல்வதாகக் கூறுவது அதனது முரண் நிலைப்பட்ட பேச்சல்ல. அலைவு தவிர்க்க முடியாததாகவே உள்ளது.

கற்பிதங்கள் தனக்கான துணைக் கற்பிதங்கள் எடுகோள்களைத் தன்னை வலுப்படுத்த என வைத்தேயிருக்கிறது. ஒரு கற்பிதத்தினைச் சுற்றத் தொடங்கும் மனமானது அதனது கிளைகளுக்கும் தாவவே முயல்கிறது. அங்கே அலைவென்பது தொடங்கிவிடுகிறது. மனம் இவ்வாறான அலைவின்போது கண்களின் கவனத் திசைகளை மாற்றி கற்பிதங்களோடு பொருத்தித் திருப்திகாணத் துடிக்கிறது. காதலது நிலையும் இவ்வகைப்பட்டதே. மனந்தான் கண்களையும் காதுகளையும் இயக்குகிறது. அவ்வாறேதான் தொடுகையுணர்ச்சியினது நிலையும். தொடுகையுணர்ச்சியா? அது என்ன? சிந்திப்போம்.

# பொருளாதார நெருக்கடியால் விளைந்த நல்ல பயன்

பொருளாதார நெருக்கடியால் இலங்கை அதிக சிரமங்களை எதிர்கொண்டு வந்தாலும் அதன் மூலம் நன்மையும் கிடைத்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாட்டில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் உடல் பருமன் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவு நடத்திய ஆய்வில், துரித உணவு மற்றும் இனிப்பு பானங்களின் பயன்பாடு வெகுவாக குறைந்துள்ளமை மற்றும் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளமை இதற்கு காரணமென தெரியவந்துள்ளது.

துரித உணவு சாப்பிடாமல் இருப்பது, இனிப்பு பானங்கள் பயன்படுத்துவதை குறைப்பது, குறுகிய பயணத்திற்கு முச்சக்கரவண்டிகளை பயன்படுத்தாமல் இருப்பது போன்றவற்றை செலவு அதிகரிப்பால் மக்கள் தவிர்த்தமை மக்களின் ஆரோக்கியத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிள்ளைகளுக்கு துரித உணவுகளை வழங்குவதற்குப் பதிலாக, வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் கீரைகளை வழங்குவதற்கு பெற்றோர்கள் நடவடிக்கை எடுப்பதும் இதன்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாட்டை உள்ளடக்கிய 105 கிராமிய சேவை அலுவலர் பிரிவுகளைப் பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலைமை தொற்று அல்லாத நோய்களைத் தடுப்பதற்கான முயற்சிகளுக்கு திறம்பட பங்களிக்கும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு வரும் நீரிழிவு நோய், கல்லீரலில் கொழுப்பு சேருதல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த இந்த நிலை உதவிகரமாக இருக்கும் என அந்தப் பிரிவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



வெள்ளை கட்டும் நடைமுறை தொடக்க காலத்தில் இருந்து இப்போதுவரை தொடர்கிறது. தொடக்க காலத்தில் இதற்குத் தேவை இருந்தாலும் தற்காலத்தில் அவ்வாறு இல்லை. ஆனாலும் இது நீள்கிறது. இது ஏன் தொடக்கம்...? இதன் தேவைதான் என்ன...? இப்போதும் இது தேவைதானா? என்பது தேடலுக்குரியது.

**தொடக்கம்**

பழங்காலத்தில் நம்மூரில் வீடுகள் கொட்டில் வீடுகளாக இருந்தன. நம்மூர் மாத்திரமல்ல அனைத்து ஊர்களின் நிலையும் 50 வருடங்களுக்கு முன்னர் இதுதான். அந்த வீடுகள் கிடுகு, பனையோலை ஆகியவற்றால் வேயப்பட்டன. அப்படிப்பட்ட வீடுகளில் நல்ல, கெட்ட நிகழ்வுகள் நடக்கும்போது, ஓலைக் கூரையிலிருந்து தூசுகள், விச ஜந்துகள், பூச்சி பூராண்கள், அழுக்குகள், ஒட்டடைகள், குப்பைகள் என ஏதாவது விழுந்துவிட வாய்ப்புண்டு. அவ்வாறு கீழே கொட்டிவிடாதிருக்கவே வெள்ளை கட்டப்பட்டது. தற்போது வீடுகளின் நிலமை அவ்வாறில்லை. ஆனாலும் வெள்ளைகட்டுதல் பாரம்பரியச் செயல்போல தொர்கிறது.

**இப்போதும் தேவைதானா..?**

தற்போது வீடுகள் நவீன மயப்பட்டுவிட்டன. கூரைக்கு உள்ளகத்தேயும்கூட கூரைத் தகடுகளை (லெவல் சீற்) அமைக்கிறார்கள். இதனால் தூசு துணிக்கைகள் விழுவதற்கு வாய்ப்பேயில்லை. ஆனாலும் நவீன வீடுகளிலும் இவ்வாறான நிழ்வுகளின்போது வெள்ளை ஐயா அழைக்கப்படுகிறார். வெள்ளை கட்டப்படுகிறது. பழங்காலத்தில் ஓர் அறையை அல்லது விறாந்தையை முழுதுமாக மறைத்து வெள்ளை கட்டுவதற்கான துணி அந்த வீட்டுக்காரரிடம் இருக்காது. அதனால் சலவைத் தொழில் செய்பவர்களிடம் காணப்படுகின்ற வேஷ்டி, சோலைகளைப் பயன்படுத்திக் கட்ட முடிந்தது. தற்போதுள்ள கல்வீடுகளில் வெள்ளை கட்டவேண்டிய அசியம் இல்லாது விட்டாலும் அதை ஒரு சமய, சமூக மதிப்பு, காட்டுவதற்காக கட்டப்படுகிறது. அதனால்கூட வெள்ளை கட்டும் தொழிலும் உயிர்ப்புடன் இருக்கிறது. அதை நம்பி வாழும் வெள்ளை போன்றவர்களின் வாழ்வும் உயிர்ப்புடன் இருக்கிறது. வண்ணார் என்கிற சாதிப் பெயருடன் சலவைத் தொழிலாளியாக ஊரை வெள்ளையாக்குகிறார் நமது வெள்ளை. சாதிகள் இல்லையடி பாப்பா என்பதே நமது கொள்கையாயினும் வெள்ளை ஐயாவின் வேலை நமது சமூகத்துக்குத் தேவையே. சமூகம் வெள்ளையாகட்டும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781